**செ.வெ. எண்: 522** **நாள்: 16.8.2011**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(16.8.2011)** தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை மாவட்ட உதவி இயக்குநர்களுக்கு **51** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **10** ஈப்புகள் (Jeep) வழங்கினார்கள்.

தமிழ் வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்படும் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம் மற்றும் தமிழ் வளர்ச்சிப் பணிகளை சீரிய முறையில் செயல்படுத்திடவும், உதவி இயக்குநர்கள் மாவட்டத்தில் உள்ள அரசுத் துறை அலுவலகங்கள், கழகங்கள், வாரியங்கள், தன்னாட்சி நிறுவன அலுவலகங்களை ஆய்வு செய்யவும், ஆய்வு தொடர்பான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவும், இராமநாதபுரம், கரூர், கடலூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, தருமபுரி மற்றும் தூத்துக்குடி ஆகிய பத்து மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு புதிய ஈப்புகள் வாங்க ஒப்புதல் அளித்திருந்தார்கள். அதன்படி வாங்கப்பட்ட ஈப்புகளின் சாவிகளை ஈப்பு ஓட்டுநர்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு இந்துசமய அறநிலையங்கள் தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி த்துறைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 16.8.2011